# நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இறுதிக்காலம்

மதீனாவுக்குச் சென்ற முஹம்மத் நபி(ஸல்) அவர்கள், அங்கே ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அது மஸ்ஜிதுந் நபவி என அழைக்கப்படுகிறது. அங்கு மக்களை ஒன்று கூட்டினார்கள். பிரிந்திருந்த மக்களை ஒற்றுமைப்படுத்தினார்கள். மதீனாவைப் புனித நகராக ஆக்கினார்கள்.

மஸ்ஜிதுந் நபவியில் மக்களுக்குப் போதனை செய்தார்கள். இபாதத்துக்களைச் செய்வதற்கு பயிற்சி அளித்தார்கள். இஸ்லாம் கூறுகின்ற வழியில் வாழ்வதற்கு மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

இவ்வேளை மக்கா குறைஷியர் மதீனா மீது படையெடுத்தார்கள். ஆனால் அதில் தோல்வியடைந்தார்கள். பின்னர் முஸ்லிம்களுடனும், முஹம்மத் நபி(ஸல்) அவர்களுடனும் குறைஷியர் சமாதானம் செய்து கொண்டார்கள். இதன்பின் மக்காவும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.

ஹிஜ்ரத் நிகழ்ந்து பத்தாண்டுகள் கழிந்தன. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவுக்கு ஹஜ்ஜு செய்யச் சென்றார்கள். அங்கு அறபா மைதானத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில் "மக்கள் யாவரும் சமமானவர்கள்; ஒவ்வொருவரும் மற்றவரின் உயிரைப் பாதுகாக்க வேண்டும்; பொருளைப் பாதுகாக்க வேண்டும்; மானத்தைப் பாதுகாக்க வேண்டும்; மக்கள்

வழி தவறிப் போகாமல் இருக்க வேண்டும்; அதற்காக அல்குர்ஆனையும், ஹதீஸையும் கடைப்பிடிக்க வேண்டும்; வட்டி வாங்குதல், பழிக்குப் பழிவாங்குதல் போன்ற வற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்; தான் கூறியவற்றை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மக்காவிலிருந்து ஒரு மாதத்தில் மதீனாவுக்கு மீண்ட முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டார்கள். நோய் கடுமையாகி வபாத்தானார்கள். அப்போது அவர்களின் வயது 63. இது ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு றபிஉல்அவ்வல் 12 ஆம் நாள் நிகழ்ந்தது. அவர்கள் மஸ்ஜிதுந் நபவியில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

முஹம்மத் நபி(ஸல்) அவர்களை நாமும் பின்பற்ற வேண்டும். அவர்கள் மீது ஸலவாத்துச்சொல்ல வேண்டும்.

صَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّدٍ          صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّم

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

**நபிகளார் மீது ஸலவாத்தை தினமும் சொல்வோம்.**

## பயிற்சி

**பின்வருவனவற்றுள் சரியானவற்றுக்கு சரி (√) என்றும், பிழையானவற்றுக்குப் பிழை (X) என்றும் அடையாள மிடுங்கள்.**

1. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மதீனாவில் கட்டிய பள்ளிவாசல் மஸ்ஜிதுந் நபவி. ☐
2. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மதீனாவைப் புனித நகர் ஆக்கினார்கள். ☐
3. மதீனா மக்கள் குறைஷியருடன் மோதிக் கொண்டார்கள். ☐
4. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மக்காவைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். ☐
5. ஹிஜ்ரி பத்தாமாண்டில் முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து மக்காவுக்கு ஹஜ் செய்யச் சென்றார்கள். ☐
6. முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் கடைசிப் பிரசங்கம் ஸபா மலையில் நிகழ்ந்தது. ☐
7. மக்களை வழி தவறாமல் காப்பாற்றுவது அல்குர்ஆனும் ஹதீஸும் ஆகும். ☐
8. முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் 62வது வயதில் வபாத்தானார்கள். ☐